செ.வெ.எண்: 311/2016 நாள்: 31.05.2016

# பத்திரிக்கைச் செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்தில் முதுகு தண்டுவடத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட சக்கர நாற்காலி வழங்கப்பட உள்ளது. மேற்குறிப்பிட்ட உதவி உபகரணத்தை பெறுவதற்கு முதுகு தண்டுவடத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் கீழ்க்கண்ட ஆவணங்களுடன்

1. மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை நகல்
2. குடும்ப ரேஷன் கார்டு நகல்
3. பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் - 1

10.6.2016க்குள் நாகர்கோவில் மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்தில் உள்ள மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்தில் விண்ணப்பிக்கும்படி கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சஜ்ஜன் சிங் ரா. சவான், இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவவர்,
மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
கன்னியாகுமரி மாவட்டம் (இ) நாகர்கோவில்.

தொலைபேசி எண் 04652-279411

மாவட்ட ஆட்சித் தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகர்கோவில்.

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.கே.பி. பிரமநாயகம், எம்.ஏ.,<br>மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலா்,<br>நாகர்கோவில்,<br>கன்னியாகுமரி மாவட்டம் | செய்தி மற்றும் மக்கள் தொடர்பு<br>அலுவலர்,<br>நாகர்கோவில்.<br>கன்னியாகுமரி மாவட்டம். |

ந.க.எண்.289/அ/2016 நாள்.30.5.2016

அய்யா,

பொருள் கன்னியாகுமரி மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம் - நாகர்கோவில் - முதுகு தண்டு வடம் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக வடிவமைக்கப்பட்ட சக்கர நாற்காலி வழங்குவதற்கு தகுதியான பயனாளிகளிடம் இருந்து விண்ணப்பம் பெறும் பொருட்டு பத்திரிகை செய்தி வெளியிட கோருதல் ___ தொடர்பாக

பார்வை 1) அரசாணை (நிலை) எண் 1, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந 2-1) துறை நாள் 8.1.2015
2)மாற்றுத் திறனாளிகளுக்கான நல ஆணையர், சென்னை 78 அவர்களின் செ.மு.ஆ.எண்.2121-இவாததி-2015 நாள் 20.2.2016.
3)மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஒப்புதல் நாள் 30.5.2016

பார்வைகளின்படி 2015-2016ம் நிதியாண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் முதுகு தண்டு வடம் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக வடிவமைக்கப்பட்ட சக்கர நாற்காலி வழங்குவதற்கு தகுதியான பயனாளிகள் விண்ணப்பிக்கும் பொருட்டு இணைப்பில் கண்ட மாவட்ட ஆட்சித் தலைவரின் செய்திக் குறிப்பினை பத்திரிகைகளில் வெளியிட்டு தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இணைப்பு பத்திரிகை செய்தி 1

மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்
கன்னியாகுமரி மாவட்டம்.